முக்கியம் இல்லை. போடப்படுகிற அதிகாரிக்கு கொடுக்கப்படுகிற அதிகாரத்தைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு அதிகாரம் இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தான் திறமைசாலி என்றும் மற்றவர்கள் எல்லாம் திறமைசாலி இல்லை என்று தவறாகக் கருதிவிடக் கூடாது. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திறமைசாலிகள் தான். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அல்லாதவர்களிலும் திறமைசாலிகள் இருக்கிறார்கள். சில இடங்களில் அவர்களை விட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக அல்லாதவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். திறமை என்பது பட்டப்படிப்பில் மட்டுமே வரவில்லை. பெறுகிற பட்டத்தைப் பொறுத்து மட்டுமே வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 592, திரு. தா. வேடியப்பன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

592—

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இடம் கையகப்படுத்தல்

*6801 திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இடம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) மேற்படி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ), (ஆ) மற்றும் (இ): திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு மிக விரைவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. அரசின்போது எங்களுடைய வடஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப்

பிரித்து ** எங்களுடைய மாவட்டத்தை அனாதினமாக விட்டுவிட்டார். நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பரிசீலனை செய்து உடனடியாக நிலத்தை கையகப்படுத்தி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ** இருப்பினும் அந்த தி.மு.க. அரசின் போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றங்கள் சொல்லக்கூடாது என்று இருக்கிறது. குற்றங்கள் சொல்லுகிறேன் என்று சொல்லிவிட்டே நீங்கள் ஆரம்பிக்கக் கூடாது. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தி.மு.க. ஆட்சியில் ஆரம்பிக்கிறபோது இதற்கு அலுவலகம் இல்லாமல் விட்டுவிட்டார்கள் என்கிற அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

திரு. தா. வேடியப்பன் : கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின்போது எங்களுடைய வடஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து எங்களுடைய திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு எந்தவிதமான நடவடிக்கையுமே எடுக்கவில்லை. அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமே கட்டப்படவில்லை. இதற்கு இடமும் தெரிவு செய்யப்படவில்லை. எனவே திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தின் மையப் பகுதியில் போளூருக்கும் திருவண்ணாமலைக்கும் மைய இடத்தில் வேங்கிக்கால் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு இடம் தெரிவு செய்யப்பட்டு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் என்ற பெயர் வைத்ததே இதய தெய்வம் புரட்சித் தலைவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி). புரட்சித் தலைவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

காலத்திலே எந்தெந்த மாவட்டம் பிரிக்கப்படும் என்பதும் அதற்கு என்ன பெயர் என்பதையும், எந்தெந்த மாவட்டங்களில் எந்த வட்டங்கள், எந்த ஏரியாக்கள் என்பதைக் கூட அவர் காலத்தில் நியமனம் செய்துவிட்டு போய் விட்டார்கள். அட்டவணை போட்டார்கள். அந்த அட்டவணையைத் தான் பின்னால் வந்தவர்கள் நடத்தினார்களேயொழிய—அந்த அட்டவணையிலும் சில குறைபாடுகளை ஏற்படுத்தினார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நான் முதலிலே தெரிவித்தபடி மிக விரைவில்—இப்பொழுது 3, 4 இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்த்து தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். வருவாய்த் துறையிலே சிறப்பு ஆணையாளர் அதைப் பார்த்து அந்த 3, 4 இடங்களில் எது மக்களுக்கு மிக சௌகரியமாக இருக்கும் என்பதை எண்ணி எதிர்காலத்தில் அந்த மாவட்டத்தில் அங்கே பல கட்டடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய ஏதுவான இடத்தில் விரைவில் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 593. திரு. ஓ. எஸ். அமர்நாத். மாண்புமிகு கல்வி அமைச்சர். 593—

மதுரையில் கூடுதல் அரசு மகளிர் கல்லூரிகள்.

*2426 திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மதுரை நகரிலும் பக்கத்து கிராமங்களிலும் படிக்கும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போவதால் மதுரையில் மேலும் இரண்டு கூடுதல் அரசு மகளிர் கல்லூரிகள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே மதுரை மீனாட்சி அரசு கலைக்கல்லூரி என்று ஒரே ஒரு கல்லூரி இருக்கிறது. மதுரை நகரைச் சுற்றி மொத்தமாக மக்கள் தொகை 13 இலட்சம் உள்ளது. மதுரை மாவட்டத்தைச் சுற்றி மக்கள் தொகை மொத்தம் 25 இலட்சம் வரை